எழுத்துக்களம்
வெளியீட்டகம்

கவிஞர்

# கவிவளவன்



# நவீன ஆத்திசூடி

# நவீன ஆத்திசூடி

கவிஞர் கவிவளவன்

எழுத்துக்களம் வெளியீட்டகம்,
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு
செம்பாக்கம், சென்னை—73

**உரிமை:** ஆசிரியருக்கே!

முதற் பதிப்பு: **April 2016**

**திருத்திய இரண்டாம் பதிப்பு: February 2019**

திருத்தங்களுடன் மூன்றாம் பதிப்பு: **March 2021.**

**© பதிப்புரிமைப் பெற்றது!**

ஒளியச்சுக் கோவை, நூல் வடிவம்
**K P Asokan, M.A., M.Sc., M.B.A., M.C.A., LLB**

**Please visit**
**www.thadaakam.co.in**
**a web magazine**

இந்நூல் விற்பனைக்கல்ல!



இது ஓர்
**எழுத்துக்களம்** வெளியீடு
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு,
**செம்பாக்கம், சென்னை -73**
**அலைபேசி: 9940061280**
**www.epublish.co.in**
**www.ezhuththukkalam.co.in**

இந் நூல்,
எனது வீட்டுத் திண்ணையில்,
எனக்கு
ஏட்டுக் கல்வியைத்
தொடங்கி வைத்த
என்னுடைய முதல் ஆசான்;
ஐயா, **தெய்வசிகாமணி** முதல்,
எனக்கு;
எண்ணும், எழுத்தும்,
சொல்லிக் கொடுத்த;
என்னுடைய எல்லா
ஆசிரியப் பெருமக்களுக்கும்!



## முதற் பதிப்பின் முன்னுரை

அன்புடையீர்,

2004-ம் ஆண்டின் ஒரு மாலைப் பொழுதில், காப்பி அருந்தியபின், சிந்தனை ஓட்டத்தில், கடகட வென மலர்ந்ததே இந்த ஆத்தி(ச்)சூடி. சில ஆண்டுகள் கழித்து, பிறிதொரு நாள், விடுபட்ட எழுத்துக்களுக்கெல்லாம் எழுதிச் சேர்த்துச், செப்பம் செய்தேன்.

எனது, படைப்புகள் அடங்கிய இணைய தளத்தில் வெளியிட்டேன். அவ்வைப் பிராட்டியைப் போல் செய்துள்ளேனா என்பதை நீங்கள் தான் கூற வேண்டும். மகாகவி பாரதி, புதிய ஆத்தி(ச்)சூடி என்றதால், நான் நவீனம் என ஆக்கிக் கொண்டேன். பாரதியுடையதில் விவேகத்துடனான வேகம் இருக்கும். இந்தக் கால ஓட்டத்துக்குத் தக்கவாறு, எனதுப்படைப்பு அமையலாம்.

இதற்கு முன்னும் எனதுப் படைப்புகள் பல உண்டு. அவற்றைத் தொகுத்து வெளியிடும் பணியில், என்னுடைய மனைவியால் நடத்தப் பெறும் இந்த எழுத்துக்களம் செயல் பட்டு வருகிறது.

என்னுடைய மூத்தமகனின் திருமணத்தில் இதனை வெளியிட்டு அனைவருக்கும் வழங்குவதில் பெருமைப் படுகிறேன். இதற்கு, எல்லாவகையிலும் துணை புரிந்த என்னுடைய மனைவி திருமதி மங்கையர்க்கரசிக்கு எனது மனமார்ந்த நன்றி!

**நாள்: 11-04-2016**



அன்புடன்,

**கு.ப. அசோகன்**



**வணக்கம்,**

திருத்திய இரண்டாம் பதிப்பாக, கண்ணுற்றப் பிழைகளையும் நீக்கி, சிற்சில மாறுதல்களுடன், இதனை என்னுடையப் பெயர்த்தியின் பிறந்த நாளில் வெளியிடுவதில் மனம் மிகவும் பெருமிதம் கொள்கிறது. என்னுடைய ஆசான்களை யெல்லாம் நினைவு கூர்ந்துள்ளேன். யாவரும், அறிவைப் புகட்டி, ஆற்றலைத் திறம்பட வெளிப்படுத்தும், வழியைக் கற்றுத் தந்தவர்கள். என்னுடையத் தலைமை ஆசிரியர், திருமிகு, M அல்போன்ஸ்ராஜ், எனக்குக் கணிதத்தின் மீது ஈடுபாடு வரக் காரணமானவர் மட்டுமல்ல, எனது, கிட்டப் பார்வைக் குறைபாட்டைக் கண்டறிந்து நிவர்த்திக்கச் சொன்னவர். அண்மையில், ஒரு திருமணத்தில் கண்ட போது, தன்னுடைய மகனை அழைத்து பெருமிதத்துடன் என்னை அறிமுகப் படுத்திய அறிவியல் ஆசிரியர் திரு C. செங்கமலை, KS ஆகிய திரு K சுந்தரமூர்த்தி, CT எனும் திரு C. தியாகராஜன் , திரு சிவசுப்பிரமணியன், பாட்டனார் வீட்டில் படித்த போது, தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் 'பசி' எனப் பட்ட திரு ப.சின்னச்சாமி, என ஒருப் பட்டியல் நீளும்.

என்னுள் இருந்த, இலக்கிய நுகர்வை மேம்படுத்தியவர்கள்; என்னுடையத் தமிழ் பேராசிரியர்கள். தமிழ் நேயர் திரு பா. மாசிலாமணி, தேவாரம், திருவாசகம் ஆகியவற்றை, இசையுடன் பாடும் GRK என்றழைக்கப்பட்ட திரு G.R. கிருஷ்ணமூர்த்தி, ஆகிய இருவருமாகும். கணிதப் பேராசிரியர் திரு ஏ. பழனிச்சாமி, ஆங்கிலப் பேராசிரியர்கள் திருமிகு காந்தி, திரு ஜொசப்பாண்டியன், இப்படி இன்னும் சிலர். போற்றுதலுக்குரிய எங்கள் முதல்வர் திரு M.S கோவிந்தசாமி கல்லூரி முதல்வர் களுக்கே இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எனது சிந்தையைச் செப்பம் செய்து, வாழ்க்கைப் பரலின் ஒவ்வொரு மணியையும் எனக்குள் அழகுற விளங்க வைத்து, என்னை மனிதனாக்க விரும்பிய **எந்தையே** என்னுடைய முதல் ஆசானும் முழு ஆசானுமாவார். மனிதனே மனிதனை உயர்வென்பான், எல்லா உயிரும் இம்மண்ணில் சமம் என்பது வரையில், அனைத்திலும் அறவுரைகளை அறிவுரையாகச் சொன்னவர் எந்தையே! எந்தையார் மறைவுற்றச் சமயம், எனது மனம் நீந்தியவை, சொற்கோவையாக உருவானதை ஈண்டு பிற்சேர்க்கை யாக்கியுள்ளேன்.

சென்னை—73 அன்புடன் ,

09-02-2019 **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**



## உ

பொங்குமுயர் நாளின்று ஏற்குமிந்த நல்லதோர்,
மங்கலம்சீர் வாழ்வ தழைந்து; இனியதாய்
எந்நாளும் எம்மக்கள் வாழ்ந்திருக்க எங்களின்
வாஞ்சா கணபதியே காப்பு



# அகர வர்க்கம்

அன்பை வளர்
அறிவைச் சீர் செய்
ஆற்றலைப் பெருக்கு
இகழ்வைத் தவிர்
இன்சொல் கூறு
இன்பம் சேர்
ஈடின்றி அன்பு செய்
ஈரடி கல்
ஈகையை மறவாதே
உண்மையைக் கைகொள்
உரிமையைக் கேள்
உறுதியாய்ச் செயல்படு
ஊக்கம் கொடு
ஊன்று கோலாயும் இரு
எழுச்சிக் கொள்
எளிமையைப் பேண்
ஏற்றம் காட்டு
ஏமாற்றம் நீக்கிடு
ஐயம் நீக்கு
ஒற்றுமை வளர்
ஒப்புமைப் பேணு
ஓய்வைத் தவிர்
ஓங்காரம் அறி



==0==

# ககர வர்க்கம்

கனவு செய்

கற்பனையைச் சீராக்கு

கயமைச் செய்யாதே

காதலையும் வளர்

காழ்ப்பினை நீக்கு

காலத்தையும் அளவிடு

கிணற்றைப் போலாகு

கீழ்மைச் சேராதே

குடிமைப் போற்று

குன்றின் மேல் விளக்காகு

கூடி வாழ்

கூட்டம் சேர்க்காதே

கெடுதிப் போக்கு

கெட்டவை விலக்கு

கேண்மை வளர்

கைகளை இணை

கொண்டதைச் செறிவாக்கு

கொள்கைப் போற்று

கோள்வினை அழி





==0==

## சகர வர்க்கம்



சமத்துவம் தனைப் பேண்

சாதீயம் ஒழி

சங்கடம் சேர்க்காதே

சார்புநிலை நீக்கு

சிந்தையில் நலம் சேர்

சிறுமையை அடக்கு

சீர்மைப் பெருக்கு

சீரிய பணிசெய்

சுவையும் அறி

சூழ்ச்சியை உடை



செலவை அளவு செய்

செந்தமிழும் அறிந்திடு

செய்மையும் போற்று

சொல்வளம் காட்டு

சோர்வை நீக்கு

## ஞகர வர்க்கம்

ஞமலியாய் நினைவு கொள்

ஞாயிறாய் வாழ்



==0==

# தகர வர்க்கம்



தவறைக் களை

தன்மானம் வளர்

தாலாட்டும் கேள்

தாய்மையை அறிந்திடு

தாய்மொழியும் கல்

திமிரைச் சீர் செய்

திறம்படச் சிந்தை கொள்

தீங்கை அழி

தீயவினைச் சேராதே

துணிவை வளர்

தூணாய் நில்

தெள்ளிய அறிவு கொள்

தென்றலாய் நட

தேளாயும் கொட்டு

தையலைக் கரம் கொள்

தொண்டையும் தொடர்

தொன்மம் காத்திடு

தோல்வியை மற

தோள் தாங்கு உயிர்க்கு

## நகர வர்க்கம்

நன்றி மறவாதே

நல்லனச் செய்

நன்மையால் காத்திடு

நாட்டையும் வளர்

நாடிடு நற்செயல்

நாவன்மைக் கூட்டு

நினைவை நலமாக்கு

நிந்தையில் அறிவு செய்

நீதியைத் துணைக் கொள்

நுதலை நிமிர்த்து

நூதனக் கனவு கொள்

நெல்லியோடு நீராகு

நெஞ்சம் நிமிர்த்து

நேர்மையைக் கழற்றாதே

நேரியப் பார்வை கொள்

நொந்து மடியாதே

நோக்கம் சீராக்கு





## பகர வர்க்கம்

பண்பைக் காத்திடு

பணிவும் அழகே

பழமையும் போற்றிடு

பாராட்டைப் பேண்

பார்வையில் துணிவு கொள்

பிணக்குகள் கேடு

பிறவியை அணை

பீடையைக் களை

புதுமைச் செய்

பூக்களாயும் இரு

பெருமைக் காத்திடு

பேரன்பை அணி சேர்

பைந்தமிழ்ப் பழகு

பொதுமை வழங்கு

பொய்மை நிலையாது

போட்டியாய் எழுச்சிக் கொள்

போலியை இனம் காண்



## மகர வர்க்கம்



மனிதம் பேணு

மணம் பரப்பு

மாட்சிமைக் கொள்

மாற்றமும் அறிந்திடு

மிரட்டலை எதிர்த்திடு

மீட்டலை அணைத்திடு

முயலாய் நடவாதே

முயற்சியை விடாதே

மூர்க்கம் கொள்ளாதே

மூடனையும் செப்பனிடு

மென்றபின் விழுங்கு

மென்மையும் அழகே

மேழியும் செல்வமே

மையலும் அறி

மொழியையும் காத்திடு


மோதலைத் தவிர்த்திடு



## யகர வர்க்கம்

யாக்கையைப் பேணு

யாவரும் நல்லவரே



## வகர வர்க்கம்

வளமைத் தேடு

வன்மம் தவிர்

வறுமை நீக்கு

வாய்மைக் காத்திடு

வாய்ப்பைத் தவிர்க்காதே

வித்தைகள் கற்றிடு

விடுதலையைச் சமன் செய்

விரயம் செய்யாதே

விருப்பம் கொள்

வீண்பேச்சு நீக்கு

வீரனாய் இரு

வெற்றியைத் தேடு

வெற்றிடம் நிரப்பு

வேற்றுமை நீக்கு

வைராக்கியம் கொண்டுயர்



# எந்தை

வாளெடுத்துப் போர்த்தொடுக்க வகையறியா நல்லமனம்!
'தோள்' கொடுக்கும் சோதரனாய் நிற்றலிலே செயல்வடிவம்!
நாள்பட்டப் பண்பாட்டைச் செயலாக்கும் நல்லிதயம்!
தாள்தாங்கும் நெல்மணியாய்த் தகைவுடனே எனை வளர்த்தார்!

பள்ளிக்கு எனை அனுப்பையிலும் பணிக்கு நான் செல்கையிலும்,
பிள்ளைக் கனியமுது இரண்டைப் பெற்று வளர்க்கையிலும்,
அள்ளக் குறையாத அன்பைக் காட்டி வைத்து,
துள்ளும் மானைப் போல் துவளாத மனம் கொள்ள,

வாழ்க்கைப் பரல்களின் வகையை எனக்குரைத்தார்!
தீரனே துரியோதனன்; தீமையெலாம் மாமன்வழி கண்டாலும்,
சூரனே அவன், அரசாட்சிக்குரிய 'மாறனே' என்றுரைப்பார்!
'மானுடனே மேன்மை யென்று மானுடனேச் சொல்லி வைத்தான்!

மற்றவற்றின் அறிவை நாம் மறுப்பதற்கு எது உண்டு?
யாவையும் போல், நாம் பெற்றோம் வாழ்வை' என்பார்!
"நன்மைக்கும் தீமைக்கும் நடுவினிலே நம்வாழ்க்கை;
உண்மைக்கும் பொய்க்கும் இடையே ஓரிழைக் கோடு;

உண்டென்றால் 'அது கடவுள்' அதுவே கடவுள்;
நமைவைத்துப் பார்த்தால் அது நன்மையில்லை நானிலத்தில்,
யாவருக்கும் உண்டென்றால் நன்மை யதே!
நன்மையதைச் செய்கின்ற நல்லுறவும்;

உண்மையதை அறிகின்ற நல்மனமும்;
இறைவன் அளிக்கின்ற கொடை" என்பார்!
இத்துணைத் தத்துவங்கள் எனக்குரைக்கும் உங்களுக்கு; ஏன்
இத்துணைக் கோபமென்பேன்; தத்துவமாய் உண்மைநிலை;

தகைவுடனேச் சொல்லி வைத்தார்; மெத்தச் சீரோடு,
மேதினியில் வாழ்ந்திருந்தோம்; தந்தைக்குப் பின்னே,
மோதியப் பல தீமைகளால் முகமற்றுப் போகாமல் வாழ்ந்திருக்க,
வகையாகக் கொண்டேன் கோபமதை என்பார்!

கோபக் கனலுண்டு, கொஞ்சும் அன்புண்டு,
முள்ளிட்டப் பலாவை முகம் சுளிப்பார் எவருண்டு?
கோபமின்றி அவர் செய்தக் குறைகள் ஏதுமில்லை!
நன்மையன்றி அவர் செய்தத் தீமை ஏதுமில்லை!!

வெள்ளைக்கு வெள்ளையைச் சரிபார்த்து,
வெள்ளைக்கு இலக்கணமாய் வெள்ளாடைப் பூண்டு,
வீறுநடை கொள்வார்; வெற்றிலைப் பாக்கு நிதம்;
வெள்ளைப் பற்களோ அறியும் கறை; தும்பைப் பூவாம் அவை!

முல்லைப்பூ போன்ற முத்தானப் பல்வரிசை;
சில்லைரை விழுந்தார்போல், சீரானச் சிரிப்பலைகள்!
எந்தாய் அவர்க்குச் ‘செல்வம்’, அவர்கள் இருவருக்கும்,
நான் செல்வம்; என்னவளும் செல்வம் அவர்கட்கு;

என்மக்கள் இருவரும் அவர்கட்குச் செல்வந்தானே!
கவிதை உள்ளத்தால் எனை அவர் வளர்க்க;
என்னுள்ளேக் கவிதைப் பிறக்கக் கண்டேன்! அவரைப்போல்,
சோதிடமும் கற்றேன்; கேட்போர்ப் புடைசூழ,

கீர்த்தியும் தான் அடைந்தேன்; கவிஞனாய்,
ஆட்சியுறும் ஆற்றலும் நான் அடைந்தேன்!!
இறைமை என்பது உண்மை; இறைவன் என்பது வழி!
அறிவும் ஆற்றலும் அன்னை தந்தை ஊட்டி வளர்ப்பது!!

தந்தை ஓர் வழிகாட்டி; வாழ்க்கைத்
தத்துவத்தின், ஒளிவிளக்கு; மேதினியில்,
எந்தைபோல் எவருண்டு?
எங்கு காண்பேன் இனி!

கு.ப. அசோகன்,
17-03-2007



# நூலாசிரியர் குறிப்பு

இந்நூலாசிரியர், இன்றைய திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண்அரசில், சென்னையில், இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து தற்போது பணிநிறைவுப் பெற்றுள்ளார். அடிப்படையில், கணித மாணவர்; முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினிப் பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் முதுநிலைப் பட்டத்தோடு, இளநிலைச் சட்டவியலும் பயின்று, தேர்ச்சிப் பெற்றுள்ளார். 'கல்வியில் கரை இல' என்பதாக விளங்குகிறார்.

எழுத்தும் எனக்கொருப் பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இவருக்கு, இதுவும் ஒரு வல்லமையாக திகழ்கிறது, எழுத்தாற்றலோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையுடன், கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, "கனவின் ஓசைகள்" எனும் பெயரில் தற்போது, ஒலித்தட்டாக, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும் நட்புடனும் பழகும் குணமுடையவர்.

யாதவக் கண்ணன் போலே,
    யான் கண்ட தெய்வம் இல்லை!
மாதவன் போல்வான் ஈசன்,
    மரியவள் குழந்தை ஏசு;
சோதரர் சொல்லும் அல்லா;
    சொல்லத்தான் வேறு அன்றி,
யாதுமே ஒன்றாம் அந்த,
    ஈசனின் வடிவம் தானே!

**- கவிவளவன் (1990)**

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு,
செம்பாக்கம், சென்னை - 73
அலைபேசி: 99400 61280
www.epublish.co.in
www.ezhuththukkalam.co.in